RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22232

# சிவசங்கரியின் அம்மா பிள்ளை என்னும் புதினத்தில் வழிபாடு

**ரூ. ரிஜோனா [அ, *], சு. விஜயாகலைவாணி [அ]**

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

# Worship in Sivashankari's Novel Amma Pillai

**R. Rejona [a, *], S. Vijayakalaivani [a]**

[a] Department of Tamil, A. P. C. Mahalaxmi College for Women, (Affliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: jeromerejonarejona18465@gmail.com

Received: 26.09.2022
Revised: 28-10-2022
Accepted: 01-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Folk literature is the only thing that remains as the remnant of the culture of the ancient Tamil people. Folklore has been originated when man began to believe something. In order to express, their thoughts and feelings people write novels and short stories. Through novel, one can describe his or others life completely. The works created in particular reflect the thoughts and feelings of the people living in that area. In that, way every work of Sivashankari excels. The purpose of this article is to explore the worship in the novel Amma Pillai.

**Keywords:** Sivashankari, Amma Pillai, Worship, Culture

## முன்னுரை

தொன்மைக் காலப் பண்பாட்டின் எச்சமாக விளங்குவது நாட்டுப்புற இயலாகும். மனித இன வரலாற்றில் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் தோன்றிய பொழுதே நாட்டுப்புறவியலும் தோன்றிவிட்டது. எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அவரவர் மொழியிலேயே வெளிப்படுத்துவதற்கு சிறுகதைகளையும், புதினங்களையும் படைக்கின்றனர். புதினங்களுக்கு ஒருவருடைய வாழ்வியலை முழுமையாக எடுத்துக்கூறும் இயல்பு உண்டு. ஒவ்வொரு பகுதிகளிலும் உருவாகும் படைப்புகள் அவ்வட்டாரத்தில் வாழும் மக்களின் எண்ணப்போக்குகளையும், சிந்தனைகளையும் எடுத்தியம்பும், ஆற்றல் கொண்டது. அந்த வகையில் சிவசங்கரியின் ஒவ்வொரு படைப்புகளும் சிறந்து விளங்குகின்றது. அவரது படைப்புகளில் ஒன்றான “அம்மா பிள்ளை” என்னும் புதினத்தில்,வழிபாடு பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடு - விளக்கம்

வழிபாடு என்னும் சொல் ‘வழிபடு’ என்ற வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது ஆகும். இச்சொல் ‘வழியிற் செல்லுகை’, பின்பற்றுகை, வணக்கம், பூசை என்ற பொருள்களைத் தருகின்றது,

“கடவுளையோ உயிர் உள்ளவற்றையோ உயிர் இல்லாதவற்றையோ வழிபாட்டுச் சொற்களைக் கொண்டு வழிபடுவதை வழிபாடு எனலாம்” என்று Encyclopedia Britanica என்னும் ஆய்வுக் கோவையில் இடம் பெற்றுள்ளது.

தனக்கு நன்மை அளிக்கவும், தனக்கு வரும் தீமையை அழிக்கவும் வல்ல ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கையே வழிபாட்டின் தொடக்கம் ஆகும்.

மனிதர்கள் பல்வேறுபட்ட நிலையில் பல்வேறுபட்டவற்றை வழிபாட்டிற்குரியவையாகக் கருதி வழிபட்டனர். பண்டைய மக்கள் நிலம், நீர், தீ, வானம், காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்களையும் வழிபட்டனர். பின் சூரியனையும், திங்களையும் தெய்வங்களாகப் போற்றி வழிபட்டனர்.

## குலதெய்வ வழிபாடு

வழிபாட்டு முறையில் குலதெய்வ வழிபாடு ஒன்றாகும். குலதெய்வ வழிபாட்டில் மரவழிபாடு, இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாடு போன்றவை இடம்பெற்றுள்ளன.

'அம்மா பிள்ளை' என்ற புதினத்தில்,குறிப்பிடப்படும் தலைமை கதாப்பாத்திரங்களின் குலதெய்வமாக 'மைலம் முருகன்', என்ற தெய்வம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களின் ஒவ்வொரு செயலிலும் முருகனின் பெயரை உச்சரிப்பதாக கதையாசிரியர் காட்டுகின்றார்.

திருமணம் தொடங்கி குழந்தை பிறந்து வளரும் வரை ஒவ்வொரு செயலிலும் குலதெய்வத்திடம் வேண்டுதல் செய்கின்றனர். அம்மாபிள்ளை புதினத்தில் கவலையில் இருக்கும் தன் மகனிடம் அவன் கவலை என்னவென்று வினவ அவனோ தன் தாயிடம் அதைச் சொல்ல தயங்குகிறான். அதற்கு அந்த தாய்,

"இப்ப நீ சொல்லப் போறீயா இல்லையா? நாம வணங்குற மைலம் முருகன் மேல ஆணையா சொல்றேன். உன் விருப்பம் எதுவானாலும் கட்டாயம் முடிச்சு வைக்கிறேன். தான் பூசிக்கும் முருகன் மேல் ரங்கம்மா ஆணையிட, அது தந்த தைரியத்துடன் ராஜா மெதுவாக அம்மா பக்கம் திரும்பி..... என்றாவாறு" என்று ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து குலதெய்வத்தின் மீது அதீத பக்தி கொண்டிருப்பதை காண முடிகின்றது (Sivasankari, 1986).

## பூக்கேட்டல்

மக்கள் தாங்கள் எந்தவொரு செயல்களைச் செய்வதாக இருந்தாலும் தான் வணங்கும் தெய்வத்திடம் சென்று பூக்கேட்ட பின்னரே அச்செயலைத் தொடங்குவர். திருமணம் செய்வது, பெயரிடுவது, வீட்டில் நிகழும் நல்ல காரியங்களுக்காக பூக்கேட்டுப் பார்க்கும் பழக்கம் இன்று வரையில் நடைமுறையில் உள்ளது.

சிவசங்கரி தனது புதினத்தில்,இதனை பதிவு செய்துள்ளார். "நேத்து இந்த யோசனை வந்ததுமே, காலைல பூஜ பண்றப்போ, முருகனுக்கு பூப்போட்டுப் பார்த்தேன். முருகன் உத்தரவு கொடுத்திட்டான். அதான் நினைச்சத உடனே நடத்திடுவோம்ன்று ஆசையில உங்கள வரச் சொன்னேன்" தன் மகனின் திருமணத்திற்காக ரங்கம்மா பூக்கேட்டு பார்க்க, தான் நினைத்த பூ வந்ததால் முருகன் அதற்கு சம்மதம் தெரிவித்ததாக எண்ணி மகிழ்கின்றாள் (Sivasankari, 1986).

சாமியின் முன்பு தான் வேண்டி வந்த காரியம் நடக்குமா நடக்காதா என்று இரண்டு வண்ணங்களில் மலரினை போட்டு அதைக் கண்களை மூடிக் கொண்டு எடுப்பர். தான் விரும்பிய வண்ண மலர் வந்தால் சாமி சம்மதம் தெரிவித்து விட்டதாக இன்றளவும் நம்புகின்றனர்.

## கரகம் எடுத்தல்

எல்லா வழிபாடுகளிலும் கரகம் எடுத்தல் நிகழ்வு இன்றியமையாததாக இருக்கும். கோவில் திருவிழா என்றாலே இதில் கரகம் எடுத்தல் முதன்மை பெறுகின்றது. அதிலும் கரகம் எடுத்தல் சிறப்பான சடங்காக உள்ளது. பித்தளை செம்பில் நீரை நிரப்பி அதன் மேல் பூக்களையும், வேப்பங் கொத்துக்களையும், தென்னம் பாளைகளையும் வைத்து கூம்பு வடிவில் மூன்றடிக்கு நூலால் கட்டி

அலங்காரம் செய்வர். கோயிலுக்கென்றே கரகம் தயாரிப்பதற்கு ஓர் இடத்தை ஒதுக்கி வைத்திருப்பர். அவ்விடம் ஆற்றங்கரையாகவும், அல்லது கிணற்றுள்ள பகுதியாகவும் இருக்கும்.

“ஒருமுறை கோவில் உற்சவத்தில் கரக ஆட்டக்காரர் பிரமாதமாக சுழன்று சுழன்று ஆட அதில் ஒரு பருக்கைக் கூட மிச்சம் வைக்காமல் சாப்பிட…” என்று சிவசங்கரி தனது நாவலில் குறிப்பிட்டுள்ளார் (Sivasankari, 1986).

கரகம் ஆடுபவர் கோவிலில் காப்பு கட்டி விரதம் இருந்து கரகம் ஆடுவர். அவ்வாறு விரதம் இருப்பதன் மூலம் அந்த தெய்வம் இவர்கள் உடலில் இறங்குவதாக ஒரு நம்பிக்கை.

## நம்பிக்கைகளும் வேண்டுதலும்

பண்டைய மக்கள் தன்னைச் சுற்றி நடைபெறக் கூடிய செயல்களுக்கு காரணம் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தனர். பின் ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணம் கண்டறிந்தனர். இவை காலப்போக்கில் நம்பிக்கைகளாக மாற்றம் பெற்றன. மக்கள் கொண்ட நம்பிக்கைகள் பழக்க வழக்கங்களால் சடங்குகளாக மாற்றம் பெற்றன. மக்களின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. தனக்கு வேண்டியதை கடவுள் கொடுத்தால் அதற்கு பதிலாகத் தன்னால் முடிந்ததைத் திருப்பிக் கடவுளுக்குத் தருவதாக வேண்டிக் கொள்கின்றனர்.

“மறக்காமல் தெய்வங்களிடமே வேண்டிக் கொண்டால் நல்லபடியாய் குழந்தை பிறந்ததும் மைலம் முருகனுக்கு பால் அபிஷேகம் செய்து வெள்ளியால் வேல் சுற்றுவதாக வேண்டிக் கொண்டாள். கூடவே முத்துக்களை பறி கொடுத்து விட்ட பயம் அவளை விரட்ட ஆயுசோடு பிள்ளை இருந்தால் அவனுடைய திருமணத்தை மார்க்கண்டேயனுடைய சந்நதியில், திருக்கடவூரில் செய்வதாக பிராத்தித்து மஞ்சள் துணியையும் முடிந்து வைத்தாள்” என்று சிவசங்கரி தனது படைப்பில் குறிப்பிட்டுள்ளார் (Sivasankari, 1986).

## காணிக்கை செலுத்தும் நம்பிக்கை

பழந்தமிழர் நெல்லும் பூவும் தூவி சிறு தெய்வத்தை வழிப்பட்டனர் என்பதை,

“நெல் உருத்துப் பரவும் கடவுளும் இலவே" (Swaminatha Iyer, 1984)

என்றும்

“அம்பு கொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்

செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி

வரிவுண்டு ஆர்ப்பச் சூட்டி”

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம் (Ramasubramaniam, 2018) .

தான் ஒன்று நினைத்து வேண்டி அது நல்லபடியாக நடந்தால் அதற்கு பதிலாக இதைச் செய்கிறேன் என்று வேண்டிக் கொள்வர். அது நல்லபடியாக நடந்து விட்டால் தான் வேண்டியபடி அதை திரும்பி செய்வதே காணிக்கை செலுத்துதல் என்று கூறுகின்றனர்.

“வேண்டிக் கொண்டபடி குடும்பத்தோடு மைலத்திற்குச் சென்று முருகனுக்கு குடம் குடமாய்ப் பால் அபிஷேகம் பண்ணி மறக்காமல் கடலூர் நகைக் கடையில் வேல் செய்யச் சொல்லி சாற்றினாள்”[8] என்று காணிக்கை செலுத்துதல் பற்றி சிவசங்கரி தனது புதினத்தில் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

சிவசங்கரியின் ‘அம்மா பிள்ளை’ என்னும் புதினத்தில் வழிபாடு என்ற கட்டுரையில் வழிபாடு என்ற சொல் பற்றிய விளக்கம் அறிய முடிகின்றது. குலதெய்வ வழிபாடு பற்றியும் அதன் தோற்றம்

பற்றியும் அறிய முடிகின்றது. பூக்கேட்டல் என்ற நம்பிக்கையும் தான் விரும்பும் தெய்வத்தின் மீதுள்ள நம்பிக்கையும் அறிய முடிகின்றது. கரகாட்டம் என்பதும் வழிபாடுகளில் ஒன்று என்பதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகின்றது. மக்கள் கொண்ட நம்பிக்கைகள் பழக்கவழக்கங்களால் சடங்குகளாக மாற்றம் பெற்றன. ஆதி காலத்தில் மனிதன் இயற்கையே கடவுளாக எண்ணி வழிபட்டான். அதன் பிறகு தன் குழுவில் உள்ள இறந்து போன மூதாதையர்களை வழிபட்டான். இதன் மூலம் மக்களின் வழிபாட்டு முறைகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. அம்மா பிள்ளை புதினம் மூலம் குலதெய்வ வழிபாடு பற்றியும், குலதெய்வத்தின் முக்கியத்துவம் பற்றியும் அறிந்து கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இறை வழிபாடு என்பது எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பது இக்கட்டுரையின் மூலம் புலப்படுகிறது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு செயலின் தொடக்கத்திலும் அவன் தன் தெய்வத்திடம் உத்தரவு கேட்டு செயல்படுகிறான் இக்கட்டுரையின் மூலம் தெரிந்துக்கொள்ளமுடிகிறது. இக்காலத்திலும் குலதெய்வ வழிபாடு முறையை மக்கள் பின்பற்றி வருகின்றனர். குலதெய்வ வழிபாடு என்பது மக்களோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகும்.

## References


Ramasubramaniam, V.T. (2018) Agananuru, Thirumagal Nilaiyam, Chennai, India

Sivasankari, (1986) Amma Pillai, Vanathi pathipagam, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1984) Purananooru Moolamum Uraiyum, U Ve Sa Noolaga nilayam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License